

புதுக்கோட்டை மாவட்டம், காமராஜபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.60 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் கட்டடத்தினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (10.06.2025) திறந்து வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். உடன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. , புதுக்கோட்டை மேயர் திலகவதி செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா, எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், துணை மேயர் எம்.லியாகத் அலி, அதிகாரிகள் மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, மரு.ராம்கணேஷ் மரு.விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தல்!

# கழக எம்.பி.க்களாக நால்வர் தேர்வு!

## சட்டமன்றப் பேரவைச் செயலகம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 12 -

சட்டமன்றப் பேரவைச் செயலகம் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஜூன், 2025இல் நடைபெறும் தேர்தலுக்காக வரப்பெற்ற வேட்பு மனுக்கள் நேற்று முன்தினம் (10.06.2025) முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆய்வுக்குப் பின் கீழ்க்கண்ட 6 வேட்பாளர்கள் அளித்த வேட்பு மனுக்கள் செல்லத்தக்கவை என அறிவிக்கப் பெறுகிறது.

1. பி.வில்சன், தி.மு.க.
2. எஸ்.ஆர். சிவலிங்கம். தி.மு.க.
3. திருமதி ராஜாத்தி (கவிஞர் சல்மா) தி.மு.க.
4. கமல் ஹாசன், ம.நீ.ம.
5. ஐ.எஸ். இன்பதுரை, அ.தி.மு.க.
6. ம.தனபால், அ.தி.மு.க.
7. சுயேட்சை வேட்பாளர்களால் அளிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு தேர்தல் நடத்தும் அதிகாரி அறிவித்துள்ளார்.

### நாமக்கல்லில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி வழங்கினார்!

நாமக்கல், ஜூன் 12–

முத்தமிழறிஞர்,தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் நவலடி ராஜா ஏற்பாட்டில் சங்கர கந்தசாமி கண்டர் துவக்கப்பள்ளி குழந்தைகளுக்கு ஒரு லட்சம் மதிப்பில் பள்ளி குழந்தைகளுக்கு புத்தாடைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர் பூக்கடை சுந்தர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி கலந்து கொண்டு 108 பள்ளி குழந்தைகளுக்கு 1 லட்சம் மதிப்பில் தலா ரூ 1000 மதிப்பிலான புத்தாடைகள் பள்ளி குழந்தை களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் பி.பி.தனராசு, கே.கே.சண்முகம், பேரூர் கழக செயலாளர்கள் முருகன், கருணாநிதி, பெருமாள், வழக்கறிஞர் செல்லப்பா செந்தில், மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மகிழ் பிரபாகரன், வக்கீல் பாலகிருஷ்ணன், கண்ணன், மதியழகன், நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, வேலூர் செயலாளர் ராணி மற்றும் இளைஞர் அணி பொறுப்பாளர்கள்,பேரூர், நகர, ஒன்றிய, கிளை கழகப் பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோட்டக் குப்பம் நகரக் கழக முன்னாள் செயலாளர் -

## முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.சண்முகம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!


சென்னை, ஜூன் 12–

முன்னாள் கோட்டக்குப்பம் நகர செயலாளரும், முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவருமான கழக மூத்த முன்னோடி எஸ்.சண்முகம் (வயது 93) அவர்கள் மறைவெய்தினார்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தினருக்கும், கழகத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.

### முன்னாள் கோட்டக்குப்பம் நகரச் செயலாளர்,

# முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் கழக முன்னோடி எஸ்.சண்முகம் மறைவு!



*விழுப்புரம், ஜூன், 12 -*

முன்னாள் கோட்டக்குப்பம் நகர செயலாளரும், முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவருமான கழக மூத்த முன்னோடி எஸ். சண்முகம் (வயது 93) அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு விசாலாட்சி பூரணி என்கிற மனைவியும், எஸ்.எஸ். ஜெயமூர்த்தி (கோட்டக்குப்பம் நகரச் செயலாளர்), எஸ்.எஸ். இளங்கோவன், எஸ்.எஸ்.தட்சணாமூர்த்தி, எஸ்.எஸ்.மதியழகன் ஆகிய மகன்களும், ஞானேஸ்வரி, சுமதி, சுந்தரி ஆகிய மூன்று மகள்களும் உள்ளனர் .

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ் மீது தீராத காதல் கொண்டு தனது இளமை காலம் முதலே கழகப் பணியாற்றியவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றவர். அதன்பிறகு கழகத் தலைவரான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அவர்கள் காட்டிய திசையில் முதுமையிலும் அயராத கழகப் பணியை ஆற்றியவர் அவர் மீது தீராத பற்றும் பாசமும் கொண்டவர்.

இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2020 ஆம் ஆண்டில் விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் என்ற பயணத்தின் போது அவரை, நேரில் வந்து வீட்டிலியே சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களுடன் இணைந்து கழகப் பணியாற்றியவர் அவர் மீதும் தீராத பற்று கொண்டு அசராத கழகப் பணியாற்றியவர். அப்படிப்பட்ட கழக மூத்த முன்னோடி இன்று நம்மிடையே இல்லை, அவருடைய இழப்பு கழகத்தினருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். அவருடைய இறுதி ஊர்வலம் நேற்று (11.06.2025) மாலை 4.00 மணியளவில் கோட்டக்குப்பம் நகரத்தில் உள்ள கோட்டைமேடு பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.



முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.எஸ். ஜெயமூர்த்தி, எஸ்.எஸ். இளங்கோவன், எஸ்.எஸ். தஷ்ணாமூர்த்தி, எஸ்.எஸ்.மதியழகன் ஆகியோரின் தந்தையுமான கழக மூத்த முன்னோடி எஸ்.சண்முகம் மறைவெய்தினார். தகவல் அறிந்த கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். கழக நிர்வாகிகளும் அன்னாரது உடல் மீது மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# பொதுக்குழுவா ! மாபெரும் மாநாடா?



**நா**ற்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பல்லாண்டுகளுக்கு ஒருமுறை குறிஞ்சி மலர் பூத்ததைப்போல் மதுரைக்கு கிடைத்த மாபெரும் வாய்ப்பு இந்தப் பொதுக்குழு. இதனைச் சிறப்பாகவும், கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடன் அதேவேளையில் எழுச்சி மிகுந்த வண்ணம் சிறப்பாக மாற்றோர் கண்டு மருளுகிற வண்ணம் நடத்திக் காட்டியுள்ளார் அமைச்சர் மூர்த்தி அவர்கள்.

“இப்பொதுக்குழு சித்திரைத் திருவிழா போல் நடந்து கழக வரலாற்றில் முத்திரைப் பதித்துள்ளது” என்று நம்முதல்வர் உள்ளம் மகிழ உற்சாக உணர்வோடு கூறியுள்ளார். கழகத் தலைவர் அவர்களிடம் பாராட்டைப் பெறுவதென்பது அவ்வளவு எளிதல்ல. அந்தப் பாராட்டைப் பெற்றிருக்கிறார் அமைச்சர் மூர்த்தி என்றால் எத்தகைய உழைப்பு, எண்ணிப் பார்க்க முடியாத ஏற்பாடுகள், உதயசூரியனில் ஆரம்பித்து உச்சசூரியன் வரை வெப்பத்தால் உள்ளே ஊடுருவ முடியாத அரங்க அமைப்பு, குளுகுளு தென்றலில் அமர்ந்திருக்கும் வகையில் அரங்கத்தின் உள்ளே குளிர்சாதன வசதி, ஒருவருக்கொருவர் ஒட்டிக் கொண்டும் நெருக்கிக் கொண்டும் அமராத வகையில் இடைவெளி விட்டு இருக்கைகள் வசதி அதோடு மட்டுமா!

பொதுக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் களிப்புறும் வண்ணம் களைப்பு அறியா விதத்தில் அவ்வப்பொழுது வழங்கப்பட்ட தேனீர், காபி, இடையிடையே வழங்கப்பட்ட இனிப்பு பலகாரங்கள் ஒருமுறை மட்டுமா! அதுதான் இல்லை கேட்க கேட்க வழங்கப்பட்ட விதம் அப்பப்பா... இப்படி ஒரு பொதுக்குழுவை இது வரை கண்டதில்லை என்று வந்தவர்கள் பாராட்டிய தமிழ் வார்த்தைகளில் சுவை எழுத எழுத இனிக்கும் சொற்கள்.

மதுரையை ஆண்ட மன்னர்கள் மாளிகைகளில் கூட இத்தனை அலங்காரம் இருந்திருக்க வாய்ப்பில்லை. என்னே அலங்கார அமைப்பு, பட்டுத் தோரணங்கள், பளபளக்கும் உள்ளரங்கம், தங்கமுலாம் பூசப்பட்டதைப் போன்ற ஜொலி ஜொலிக்கும் தொங்கவிடப்பட்ட துணி மாலைகள், நூறடி உயரத்தில் தலைவர் கொடியேற்ற கொடிக் கம்பம், நெகிழ வைத்த நீர் ஊற்று, அண்ணா அறிவாலயத்தை சென்னையிலிருந்து மதுரைக்கு கொண்டு வந்து விட்டார்களோ என ஆச்சரிய வினா எழுப்பும் அழகிய அமைப்பு, நுழைவு வாயிலில் நுழையும் முதல்அடி தொடங்கி முடிக்கும் அடி வரை பூக்களால் அமைக்கப்பட்ட அழகிய வரவேற்பு வடிவமைப்பு. அதில் பூமாலைகளோடு ஆயிரக்கணக்கான கவர்ந்திருந்த கழகக் கொடிகள். அவைகளின் அழகோ அழகில் சிறந்த அழகு.

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணி
செயலாளர்



மேடையோ தகதகக்கும் பல வண்ண பளிங்கு மாளிகையின் தோற்றம், இருபுறமும் தலைவர் பல்வேறு வடிவங்களில் வந்து கொண்டே இருந்த விதம், நிறைவேற்றப்பட்ட இருபத்தேழு தீர்மானங்கள் அவைகளில் வஞ்சனையாளர்களை சுடுகின்ற நெருப்பும், இளைஞர்களை ஈர்க்கின்ற இனிப்பும் கலந்திருந்த இன்சுவையும் நிறைந்திருந்தது.

மதுரை மாநகரம் முழுவதும் முதல்வர் குறிப்பிட்டிருந்ததைப் போல் சுமார் 60 கி.மீ தூரத்திற்கு இருவண்ண தி.மு.க கொடி பறக்காத இடமில்லை பார்க்காத ஆளுமில்லை என்கிற அளவிற்கு கொடிகள் பட்டொளி வீசி பறந்திட்ட காட்சி பார்த்தவர்களுக்கு பரவசம் மூட்டியது, புத்துணர்வும் தூண்டியது என்றால் மறுப்போரும் உண்டோ!

அதற்கு முன்பு நடந்த 22 கி.மீ தூரத்திற்கான தலைவரின் மக்களை சந்திக்கும் ரோடு ஷோ சிறப்பிலும் சிறப்பு. சாலைகளில் இருபுறங்களிலும் நின்றிருந்த மக்கள் கூட்டம் மறுமுறையும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் எங்கள் அன்பிற்குரிய முதல்வர் நீங்கள்தான் 2026லிலும் வாகை சூடி முதல்வராக அமரப்போகிறீர்கள் என்று தங்களின் ஆர்ப்பரிப்பின் மூலம் அறிவித்தது சிறப்பிலும் சிறப்பு. தள்ளுமுள்ளுயில்லா அதேவேளையில் தில்லுமுல்லுயில்லா தன்னடக்கமிக்க அமைதியாய் பாயும் வைகையை போல் மக்கள் வெள்ளம்.

கழகத்தில் ஏற்கனவே உள்ள 23 சார்பு அணிகளுக்கு துணையாக புதிதாக இரண்டு அணிகள் கல்வியாளர்அணி, மாற்றுத்திறனாளிகள்அணி உருவாக்கப்பட்டது. ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தின் மூலம் கழகத்தின் புதிய உறுப்பினர்களை சேர்க்க தலைவர் நிர்வாகிகளை வலியுறுத்திப் பேசியது வரவேற்கத்தக்கதாய் இருந்தது. பொறுப்புகளில் நிர்வாகிகளாக இளைஞர்களை நியமிக்க வேண்டுமென்றது கழக வளர்ச்சிக்கும், ஓயாத எழுச்சிக்கும் முக்கிய ஒன்றாகும்.

தமிழாக தமிழுக்காக வாழ்ந்து செம்மொழி என்ற சிறப்பை வாங்கித் தந்த கலைஞர் பிறந்த நாளை செம்மொழி நாளாக அறிவித்தது தமிழ் மக்கள் வரவேற்ற வாஞ்சைமிக்க அறிவிப்பு. அதோடு கழகத்திற்கு உழைத்த மதுரை மாநகராட்சியின் முதல் மேயர் முத்து அவர்களுக்கும் அழகிய சிலை. அவரது உழைப்பை மறக்காத உயர்ந்த உள்ளம்மிக்க நம் கழகத் தலைவர்.

மேடையில் பேசியவர்கள் ஒவ்வொருவர் பேச்சிலும் சுருக்கம், ஆனால் ஆழமாக கருத்து. துணைப் பொதுச்செயலாளர் சகோதரர் ஆ.ராசா எம்.பி., நீலகிரிக்கு சென்ற தலைவர் ஓய்வெடுக்கவில்லை, ஒய்யாரமாக உறங்கவில்லை, அடுத்தடுத்து ஆடம்பரமில்லா அழகு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார் என்றதோடு முதல்வரின் எளிமையைக் கண்டு ஓரளவு வசதிமிக்க படித்த பெண் ஒருவர் தலைவரிடம் பேசியதும், கடிதம் கொடுத்ததும் அக்கடிதத்தில் நீங்கள் தான் முதல்வராக மீண்டும் வரவேண்டும் என்று வலியுறுத்தி தன் ஆசையை வெளிப்படுத்தியதையும் பார்த்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதே பெண்மணியிடம் பேசிய முதல்வரின் மக்கள் அணுகுமுறையை அழகுப்பட குறிப்பிட்டார்.

இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொட்டது துலங்கும் எனும் விதத்தில் அவரது அளப்பரிய உழைப்பு மற்றும் ஆற்றலால் அவரது திறமையைப் பாராட்டி உத்வேகத்திற்கு மேலும் ஊக்கம் தரும் வண்ணம் சிறப்பானதொரு தீர்மானம். அதனால்தான் சீனா, ஜப்பான், கொரியா போன்ற விளையாட்டில் சிறந்து விளங்கும் நாடுகளின் வீரர்கள் கலந்து கொண்ட 2 நாட்களுக்கு முன்பு முடிவுற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா இரண்டாம் இடம் பிடித்துள்ளது. அதில் தமிழகத்தை சேர்ந்தவர்களும் பதக்கம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்தது இந்தியாவில் முதன்முறையாக நடந்துள்ளது. தமிழ்நாட்டு வீரர்கள் பெற்றப் பதக்கங்கள் சகோதரர் உதயநிதி அவர்கள் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு தந்த உற்சாகத்தாலும், ஊக்கத்தாலும், உதவியாலும் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இந்தித் திணிப்பைக் கண்டித்ததோடு முன்தோன்றிய மூத்த குடி என்ற சிறப்பை வெளிக்காட்டும் வண்ணம் இருந்த கீழடி ஆய்வில் வெளிவந்த தமிழர்களின் சிறப்பைக் கண்டு உதட்டளவில் தமிழ் மீது பாசம் இருப்பதைப் போலும் உள்ளத்தில் தமிழ் மீதும் திராவிட நாகரிகத்தின் மீதும் கொண்டுள்ள பா.ஜ.க அரசின் பித்தலாட்டத்தனத்தை பிய்த்துத் தொங்கப் போட்ட தீர்மானம் கழகத் தலைவர் அவர்களின் வீரத்தின் அடையாளம் ஆகும்.

எங்களுக்கு மண்டியிடவும் தெரியாது, ஊர்ந்து போகவும் தெரியாது, தவழ்ந்து செல்லவும் தெரியாது. முதல் நாள் வரை கடுமையாக பா.ஜ.கவை பேசிவிட்டு மறுநாள் மூன்று கார் மாறி மாறி ஏறி அமித்ஷாவிடம் சரணடைந்து தமிழ்நாட்டில் அடுத்து யார் ஆட்சி அமைப்பது என்பதை தீர்மானிக்கும் உரிமையை பா.ஜ.க.விடம் ஒப்படைத்த அழுகுணி கூட்டத்தின் அற்பத்தன அரசியலை கழகத் தலைவர் அவர்கள் அம்பலப்படுத்தியது ஆளுமையின் சிறப்பு மட்டுமல்ல ஆண்மையின் வெளிப்பாடும் ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞரும், இனமான பேராசிரியரும் கண்டிராத தொடர் வெற்றிகளை கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் நாடாளுமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் இடையிடையே வந்த இடைத்தேர்தல்கள் அனைத்திலும் அபார வெற்றி மட்டுமே பெற்று வரும் கழகத் தலைவர், முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மேலும் மேலும் உற்சாகம் ஊட்டும் நிகழ்ச்சியாகத் தான் அமைந்திருந்தது இந்தப் பொதுக்குழு.

அதற்காகத் தான் கழகத் தலைவர் பொதுக்குழுவை சிறப்புடன் நடத்திய அமைச்சர் மூர்த்தி அவர்களை நெஞ்சம் குளிர பாராட்டியதோடு மாமதுரை போற்றுதும், ‘மாமதுரை போற்றுதும்’ என்று சொல்வதைப் போன்று ‘மதுரை மூர்த்தி போற்றுதும் மதுரை மூர்த்தி போற்றுதும்’ என்று முத்துமுத்தான சொற்களால் வாழ்த்தினார். யாருக்கு கிடைக்கும் இந்த வாழ்த்துக்கள். அதோடுமட்டுமா விட்டார் “மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது” என்பார்கள் ஆனால் இங்கோ “மூர்த்தியும் பெரிது கீர்த்தியும் பெரிது” என்று பைந்தமிழில் பாச மொழியால் வாழ்த்தியது தெவிட்டாத தித்திக்கும் தேன்சுவை. ஓயாமல் உழைத்த மூர்த்திக்கு உரிய அங்கீகாரமே முதல்வரின் வாழ்த்து.

எல்லோரும் எதிர்த்து ஒரு சொல் உச்சரிக்க அச்சப்படும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைப் பார்த்து மீண்டும் பொதுக்குழுவிலும் அமித்ஷா அல்ல எந்த ஷா வந்தாலும் தமிழ்நாட்டை ஒரு நாளும் ஆள முடியாது என்ற கழகத் தலைவரின் அறைகூவல் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் மூவரும் சேர்ந்து விட்ட அறைகூவல் ஆகும். அதோடு மட்டுமல்ல இரண்டு கோடி கழகத் தொண்டர்கள் விடுத்த அறைகூவலும் ஆகும். உறுப்பினர் இறந்தால் பத்து லட்சம் பிள்ளைகள் படிக்க உதவி என்ற கழகத் தலைவரின் அறிவிப்பு இந்தியாவில் எந்த கட்சியும் கூறிடாத அறிவிப்பாகும். பொதுக்குழுவில் தொண்டர்களை நினைத்து அவர்களால் தான் நான் என்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் போல் கூறினார் நம்தலைவர்.

ஒன்றிய அரசு இந்தியைத் திணிக்க புதிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் இல்லையேல் நிதி ரூ.2151 கோடி தர மாட்டோம் என்று ஒன்றிய அமைச்சரே பேசுகிறார். அவர்களுக்கு தமிழர்கள் கல்வி கற்கக் கூடாது. அதுதான் நோக்கம். ஆனால் நம்முதல்வர் 10000 கோடி தந்தாலும் அக்கல்வியை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று அறிவித்தார். அதுதான் தந்தை பெரியார் கற்றுத்தந்த “சுயமரியாதை”.

இங்குதான் நம்முதல்வர் புரட்சியாளர் சேகுவாராவாக தெரிகிறார். கியூபா மக்களுக்கு பாடிஸ்டா இராணுவம் கல்வியை தர மறுத்த போது “இராணுவம் எப்படி உங்களுக்கு கல்வி புகட்டும்? மக்கள் கல்வியறிவு பெற்று விட்டால் அவர்களுடைய ஆட்சியை தூக்கியெறிந்து விடுவார்களே” என்றார். அதைத்தான் இன்று ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்கிறது. அதற்குத் தான் நம்முதல்வர் புரட்சியாளர் சேகுவாரே போல் ஒன்றிய அரசு நிதி தரவில்லை என்றாலும் கல்விக்கு நிதி நான் தருகிறேன் என்று தந்து வருகிறார்.

இத்தகைய ஒன்றிய அரசின் செயலை கண்டித்து தீர்மானம் போட்டதோடு தனது உரையிலும் நம்தலைவர் மிக அழுத்தமாக பேசினார். “நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று எந்த வேலையும் தள்ளிப் போடாதீர்கள். அந்த நாளை என்பது நிச்சய தன்மையற்றது” என்பார் பிடல் காஸ்ட்ரோ. அதே வார்த்தைகளை இங்கே குறிப்பிடக் காரணம் தேர்தல் நெருங்கி விட்டது உறுப்பினர்களை சேர்ப்பதில் இன்றே களம் இறங்குங்கள். நாளை என்று நாட்களைத் தள்ளிப் போடாதீர்கள். இரண்டரை கோடியே தலைவரின் இலக்கு. சேர்த்து மகிழுங்கள் சிறப்பைக் காட்டுங்கள்.

இந்த நேரத்தில் முக்கியமான ஒன்றை குறிப்பிடாமல் இருக்க முடியாது. விருந்தோம்பல். ஆஹா எத்தனை ஆயிரம் பேருக்கு பொதுக்குழு உறுப்பினர்கள், முதல்வர், துணை முதல்வர், அமைப்பாளர்கள், சட்டமன்ற- நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அவர்களுடன் வந்திருந்த கழகத்தினர், கார் ஓட்டுநர், பணி புரிந்தவர்கள் என அனைவருக்கும் ஒரே விதமான விருந்து.

மதுரை விருந்துக்கு மகத்தான ருசி உண்டு என்பதை பொதுக்குழுவின் ஏற்பாட்டாளர் நிகழ்த்திக்காட்டினார். சிலையை செதுக்கிய சிற்பியாக திகழ்ந்த கழகத்தின் கண்ணியமிக்க சிற்பி சகோதரர் மூர்த்தி வழங்கிய விருந்து சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு சிறப்பு. தமிழுக்கும் விருந்துக்கும் என்ன சம்பந்தம்? அன்று காசினவழுதி, முடத்திருமாறன், பாண்டித்துரைத்தேவர் போன்றோர் சங்கம் வைத்து தமிழால் விருந்து கொடுத்தார்கள். இன்று நம் சகோதரர் மாண்புமிகு மூர்த்தி கறியும், கோழியும், மீனும், பாயாசமும், ஏன் ஜிகர்தண்டாவை கூடவிட்டு வைக்காமல் அனைவருக்கும் வாழைப்பழத்தோடு விருந்தளித்து மகிழ்ந்தார்.

மொத்தத்தில் இது பொதுக்குழுவா! மாபெரும் மாநாடா? என்று கேள்வி எழுப்பியதோடு இதுவரை இப்படிப்பட்ட பொதுக்குழுவை கண்டதில்லை என்று மக்கள் பேசிக்கொண்டே சென்றது ‘இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே’ என்பதைப் போல் இருந்தது. இந்தப் பொதுக்குழுவிற்கு வாய்ப்பு தந்த முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி! நன்றி! நன்றி!

பொதுக்குழுவில்கூடினோம் பூரித்து மனம்மகிழ்ந்தோம்
சிறப்புக்குசிறப்பாக முதல்வரின் தேனான உரைக் கேட்டோம்!
2026 தேர்தலை இலக்காக மனதில் கொள்வோம்!
200 அல்ல 234லிலும் வாகைசூடிட உறுதியேற்போம்
பா.ஜ.க. எரிமலைவடிவில் வந்தாலும் தகர்த்துவெல்வோம்!